செ.வெ.எண்:05 நாள்:03.10.2017

# பத்திரிக்கை செய்தி
# திருநெல்வேலி மாவட்டம்

01.01.2018ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறையில் திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளது. இதன்படி 03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்த வரைவு வாக்காளர் பட்டியலினை வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள், வாக்காளர் பதிவு அலுவலகங்கள, குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களில் வாக்காளர்கள் பார்வையிடலாம். 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் அதாவது 31.12.1999 வரை பிறந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரினை புதிதாக சேர்த்திட மனு அளிக்கலாம். புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, பெயர் மற்றும் இதர திருத்தங்கள் செய்திட படிவம் 8, ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்திட படிவம் 8ஏ மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏல் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பங்களை 03.10.2017 முதல் 31.10.2017 முடிய உள்ள காலங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்குசாவடிகளில் சமர்ப்பிக்கலாம். மேலும் 08.10.2017 மற்றும் 22.10.2017 ஆகிய இரண்டு ஞாயிற்றுகிழமைகளில் (தங்கள் வசிப்பிட முகவரி உள்ள பகுதியில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடி அமைவிடங்களில்) காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை நடைபெற உள்ள சிறப்பு முகாம்களிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் மனு அளிக்கலாம். 07.10.2017 மற்றும் 21.10.2017 ஆகிய இரு சனிக்கிழமைகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை நடைபெறும். அன்றைய தினம் வாக்காளர் பட்டியல் பொதுமக்களுக்கு வாசித்துக்காட்டப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். அதேபோன்று நகரப்பகுதிகளில் மேற்படி இரு தினங்களில் குடியிருப்போர் நலச்சங்கங்களிலும் வாக்காளர் பட்டியல் பொதுமக்களுக்கு வாசித்துக்காட்டப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் விண்ணப்பங்கள் பெறுவதற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து வாக்குச் சாவடிநிலை அலுவலர்களும், ஆசிரியர்களும் தங்களுக்குரிய வாக்குச் சாவடி அமைவிடங்களை காலை 09.30 மணிக்கு திறந்து விண்ணப்பங்களை பெற வேண்டும். பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட இண்டர்நெட் பிரௌசிங் சென்டர் மூலமாகவும் தேர்தல் ஆணையத்தின் இணைய தளமான www.nvsp.in (National Voters Services Portal) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். பொதுமக்கள் இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது தொடர்பான புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தொலைபேசி எண் 0462-2501032 - 0462-2501035 மற்றும் திருநெல்வேலி கோட்டாட்சியர் அலுவலக தொலைபேசி எண் 0462-2501333 சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அலுவலக தொலைபேசி எண் 04634-260124 தென்காசி கோட்டாட்சியர் அலுவலக தொலைபேசி எண் 04633-222212 ஆகிய எண்களுக்கு தெரிவிக்கலாம். என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.

## சிறப்பு சுருக்க முறை திருத்தம்

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி இன்று (03.10.2017) வெளியிடப்படும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளை உள்ளடக்கிய வரைவு வாக்காளர் பட்டியலில் 12,38,651 ஆண் வாக்காளர்களும் 12,77,579 பெண் வாக்காளர்களும் 79 இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் 25,16,309 மொத்த வாக்களர்கள் உள்ளனர். மேற்படி வரைவு வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் **18– 19 வயது நிரம்பிய – 21,356** நபர்களும், **20 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள 24,94,953** நபர்களும் ஆக மொத்தம் 25,16,309 நபர்கள் உள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்னர் 05.01.2017 அன்று மொத்தம் 25,04,884 வாக்காளர்கள் இருந்தனர். அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற சிறப்பு இயக்கம் திருத்தத்தில் (Special Drive) புதியதாக 19242 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு, இறப்பு, இடமாற்றம் மற்றும் இரட்டை பதிவுகள் ஆகிய காரணங்களுக்காக மொத்தம் **7817** வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள். தற்போது 03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாளன்று மொத்தம் 25,16,309 வாக்காளர்கள் உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் இன்று (03.10.2017) வெளியிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

**05.01.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வெளியிடப்பட்ட வாக்காளர்பட்டியலின்படி வாக்காளர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | ஆண் | 12,34,102 |
| 2. | பெண் | 12,70,713 |
| 3. | இதர வகையினர் | 69 |
| | மொத்தம் | 25,04,884 |

**அதன் பின்னர் 06.01.2017 முதல் நாளது தேதி வரை நடைபெற்ற தொடர் திருத்தின்போது கீழ் கண்டுள்ளவாறு வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

| | | |
|---|---|---|
| 1. | ஆண் | 8745 |
| 2. | பெண் | 10485 |
| 3. | இதர வகையினர் | 12 |
| | மொத்தம் | 19242 |

**06.01.2017 முதல் நாளது தேதி வரை நடைபெற்ற தொடர் திருத்தத்தின் போது கீழ் கண்டுள்ளவாறு வாக்காளர்கள் தொகுதிவாரியாக இறப்பு, இடமாற்றம் மற்றும் இரட்டை பதிவுகள் போன்ற காரணங்களுக்காக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

| | | |
|---|---|---|
| 1. | ஆண் | 4196 |
| 2. | பெண் | 3619 |
| 3. | இதர வகையினர் | 2 |
| | மொத்தம் | 7817 |

**இறப்பு, இடமாற்றம் மற்றும் இரட்டை பதிவுகள் போன்ற காரணங்களுக்காக நீக்கம் செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | இறப்பு | 5385 |
| 2. | இடமாற்றம் மற்றும் இரட்டை பதிவுகள் (suo-moto deletions) | 2432 |
| | மொத்தம் | 7817 |

**03.10.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள மொத்த வாக்காளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஆண் | 12,38,651 |
| 2. | பெண் | 12,77,579 |
| 3. | இதர வகையினர் | 79 |
| | மொத்தம் | 25,16,309 |

**05.01.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வெளியிடப்பட்ட வாக்காளர்பட்டியலின்படி தொகுதி வாரியாக இருந்த வாக்காளர்கள் விபரம்**

| வ. எண் | தொகுதியின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | சங்கரன்கோவில் (தனி) | 115936 | 121396 | 6 | 237338 |
| 2 | வாசுதேவநல்லூர் (தனி) | 110715 | 112873 | 5 | 223593 |
| 3 | கடையநல்லூர் | 134859 | 134967 | 5 | 269831 |
| 4 | தென்காசி | 132322 | 135793 | 3 | 268118 |
| 5 | ஆலங்குளம் | 121326 | 127541 | 1 | 248868 |
| 6 | திருநெல்வேலி | 134183 | 138965 | 20 | 273168 |
| 7 | அம்பாசமுத்திரம் | 115454 | 121498 | 2 | 236954 |
| 8 | பாளையங்கோட்டை | 125985 | 130040 | 21 | 256046 |
| 9 | நாங்குநேரி | 122337 | 124136 | 3 | 246476 |
| 10 | இராதாபுரம் | 120985 | 123504 | 3 | 244492 |
| | மொத்தம் | **1234102** | **1270713** | **69** | 2504884 |

06.01.2017 முதல் தொடர்ந்து 02.10.2017 வரை நடைபெற்ற சிறப்பு இயக்கத்தின் போது கீழ் கண்டுள்ளவாறு வாக்காளர்கள் தொகுதிவாரியாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

| வ. எண் | தொகுதியின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | சங்கரன்கோவில் (தனி) | 747 | 871 | 0 | 1618 |
| 2 | வாசுதேவநல்லூர் (தனி) | 691 | 754 | 2 | 1447 |
| 3 | கடையநல்லூர் | 1169 | 1286 | 0 | 2455 |
| 4 | தென்காசி | 881 | 936 | 0 | 1817 |
| 5 | ஆலங்குளம் | 943 | 1253 | 0 | 2196 |
| 6 | திருநெல்வேலி | 917 | 1199 | 9 | 2125 |
| 7 | அம்பாசமுத்திரம் | 959 | 1246 | 1 | 2206 |
| 8 | பாளையங்கோட்டை | 976 | 1271 | 0 | 2247 |
| 9 | நாங்குநேரி | 714 | 845 | 0 | 1559 |
| 10 | இராதாபுரம் | 748 | 824 | 0 | 1572 |
| | மொத்தம் | **8745** | **10485** | **12** | 19242 |

தொகுதிவாரியாக இறப்பு, இடமாற்றம் மற்றும் இரட்டை பதிவுகள் போன்ற காரணங்களுக்காக நீக்கம் செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் விவரம்

| வ. எண் | தொகுதியின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | சங்கரன்கோவில் (தனி) | 300 | 238 | 0 | 538 |
| 2. | வாசுதேவநல்லூர் (தனி) | 76 | 43 | 0 | 119 |
| 3. | கடையநல்லூர் | 617 | 557 | 1 | 1175 |
| 4. | தென்காசி | 486 | 457 | 0 | 943 |
| 5. | ஆலங்குளம் | 690 | 692 | 1 | 1383 |
| 6. | திருநெல்வேலி | 261 | 206 | 0 | 467 |
| 7. | அம்பாசமுத்திரம் | 500 | 409 | 0 | 909 |
| 8. | பாளையங்கோட்டை | 262 | 126 | 0 | 388 |
| 9. | நாங்குநேரி | 700 | 562 | 0 | 1262 |
| 10. | இராதாபுரம் | 334 | 329 | 0 | 663 |
| | மொத்தம் | 4196 | 3619 | 2 | 7817 |

03.10.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வெளியிடப்படும் வரைவு வாக்காளர்பட்டியலில் உள்ள மொத்த வாக்காளர்கள்

| வ. எண் | தொகுதியின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | சங்கரன்கோவில் (தனி) | 116383 | 122029 | 6 | 238418 |
| 2. | வாசுதேவநல்லூர் (தனி) | 111330 | 113584 | 7 | 224921 |
| 3. | கடையநல்லூர் | 135411 | 135696 | 4 | 271111 |
| 4. | தென்காசி | 132717 | 136272 | 3 | 268992 |
| 5. | ஆலங்குளம் | 121579 | 128102 | 0 | 249681 |
| 6. | திருநெல்வேலி | 134839 | 139958 | 29 | 274826 |
| 7. | அம்பாசமுத்திரம் | 115913 | 122335 | 3 | 238251 |
| 8. | பாளையங்கோட்டை | 126699 | 131185 | 21 | 257905 |
| 9. | நாங்குநேரி | 122381 | 124419 | 3 | 246803 |
| 10. | இராதாபுரம் | 121399 | 123999 | 3 | 245401 |
| | மொத்தம் | 1238651 | 1277579 | 79 | 2516309 |